[2nd November 1962

THE HON. SRI V. RAMAIAH: (அ) & (இ) A scheme for modernising the channels in the old delta area in Thanjavur district under the Cauvery, Vennar and their branches is under investigation by a Special Division of the Public Works Department.

திரு. க. ர. நல்லசிவம்: இதன் மூலமாக புதிய நிலங்கள் ஏதாவது சாகுபடிக்குக் கொண்டுவர முடியுமா? அல்லது பழைய நிலங்களுக்கு நல்ல தண்ணீர் சப்ளை கிடைப்பதற்கு இந்தத் திட்டம் ஏற்பாடாகியிருக்கிறதா?

கனம் திரு. வெ. ராமையா: இந்தத் திட்டத்தின் முக்கியமான நோக்கம் என்னவென்ருல், அந்த ஜில்லாவிலுள்ள விவசாயிகளுக்கு காலா காலத்தில் தண்ணீர் கிடைப்பதற்கான புது முயற்சியை எடுத்துக் கொண்டிருக்கிறேம். இந்த வேலையைத் தொடர்ந்து செய்யும்பொழுது இன்னும் அதிகமான அளவுக்கு தண்ணிரை அந்த ஜில்லாவில் இருக்கக்கூடிய மற்ற நிலங்களுக்கும் கொடுக்க முடியுமா என்பது பரிசிலனை செய்யப்பட்டு வருகிறது.

திரு. க. ர. நல்லசிவம்: இதேபோன்று ராஜ்யம் பூராவிலுமுள்ள நதிகளுடைய வாய்க்கால்களை எல்லாம் ஒட்டுமொத்தமாகப் பரிசிலனை செய்து இம்மாதிரி வேலையை மேற்கொள்ளுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

கனம் திரு. வெ. ராமையா: தஞ்சை ஜில்லாவில் பரிசிலனை செய்யவேண்டுமென்பதே இப் புது முயற்சி. ஆனல் இதில் விசேஷ கவனம் செலுத்தி, இதில் ஏற்படக்கூடிய நல்ல சூழ்நிலை தெரிந்த பிறகு, மற்ற இடங்களுக்கும் பரவலாக விஸ்தரிக்க வேண்டு மென்பதுதான் என்னுடைய ஆசை. இருந்தாலும் உடனடியாக பெரியார் ஸிஸ்டம் தாம்பிரபாணி ஸிஸ்டம் போன்ற முக்கியமான பகுதிகளுக்கு இந்தப் பரிசிலனையை விஸ்தரிக்க வேண்டு மென்பதுதான் அரசாங்கத்தின் நினைப்பு.

* **1098 கேள்வி.—திரு. சா. ராமசாமி:** கனம் பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கொள்ளிடம் ஆற்றில் மஞ்சமேட்டுக்கருகிலிருந்து சினை ஆறு பிரித்து பாசன வசதியளிக்கும் உத்தேசத்துடன் செய்யப் பட்ட சர்வே எந்தக் கட்டத்திலுள்ளது?

(இ) எப்போது வேலை துவங்கப்படும்?

THE HON. SRI V. RAMAIAH: (*a*) & (*b*) The scheme is the same as the Marudayar Reservoir Scheme in Udayarpalayam taluk and it has been deferred for the present.

விதைப்பண்ணை

* **1099 கேள்வி.—திரு. இரா. நாராயணன்:** கனம் விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

உடையார்பாளையம் வட்டம், செந்துரைகிராமத்தில் விதைப் பண்ணை ஒன்று நிறுவ உத்தேசமுண்டா?

2nd November 1962]

கனம் திரு. பூ. கக்கன் : இல்லை.

* **1100 கேள்வி.—திரு. கி. நாராயணசாமி பிள்ளை :** கனம் விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) விருத்தாசலம் தாலுகா, குப்பநத்தம் கிராமத்தில் விதைப் பண்ணை ஏற்படுத்தும் உத்தேசமுண்டா, விவரமென்ன ?

(இ) அப்படியானால், அது சம்பந்தமாய் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்வி எழவில்லை.

கிராம சாலைகள் திட்டம் (மாணிக்கப்பங்கு கிராமம்)

* **1101 கேள்வி.—திரு. கி. இரா. சம்பந்தம் :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மாயூரம் தாலுகாவில், தரங்கை மாணிக்கப் பங்கு மீனவர்களுக்காக ரஸ்தா போடுவதும், கப்பி போடுவதுமான திட்டம் எந்த நிலையிலுள்ளது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The work for metalling of the road from Tranquebar to Manickapangu village has already been sanctioned by the Panchayat Union Council, Sembanarkoil under the Village Works Programme and will be executed shortly.

Lorries (accidents)

* 1102 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Chief Minister be pleased to state the steps taken to control the speed and to improve the condition and upkeep of lorries so as to avoid frequent accidents on the roads?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : A statement [a] is placed on the table of the House.

திரு. வை. சங்கரன் : இப்போது எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கும் நடவடிக்கைகளோடுகூட, லாரிகள் போகும் ஸ்பீடை லிமிட் செய்யும் ஒரு கருவியைப் பொருத்தவும், குறிப்பிட்ட அளவு எக்ஸ்பீரியன்ஸ் உள்ளவர்கள்தான் லாரி டிரைவர்களாக அமர்த்தப்பட வேண்டுமென்றும், குறிப்பிட்ட மைல் தூரத்திற்கு மேல் போகக் கூடிய லாரிகளுக்கு இரண்டு டிரைவர்கள் போட்டு நடுவிலே டிரைவரை மாற்றவேண்டுமென்றும் அரசாங்கம் உத்தரவு பிறப்பிக்குமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஸ்பீடைக் குறைத்து ஓரளவுக்கு மேல் அதிகமான வேகத்தில் ஓட்டாமலிருக்க 'மெகானிகல் டிவைஸ்' அமைப்பதுபற்றிப் பரிசீலனை செய்யப்பட்டு அது

---

a Printed as Appendix IV on pages 519-520.